DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No M.C.No. 01/2025 PW– 1

Name : அர்ச்சனா தேவி

Father's/Husband's Name : முருகேசன்

Village : புன்னப்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 31/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of July 2026

மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பு முதல் விசாரணை)**

1. நான் இம்மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன். நான் எதிர்மனுதாரரான என் கணவருக்கு எதிராக வாழ்க்கை பொருளுதவி கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மனுதாரர் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1) 02.02.2014ம் தேதியில் திருமணம் நடந்ததை காட்டக்கூடிய திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும்,

2) திருமண புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும்,

3) 28.05.2016ம் தேதியில் எனது மகள் கனினா பிறந்தார் என்பதைக் காட்டக்கூடிய பிறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.3 ஆகவும்,

4) எதிர்மனுதாரர் வேறு ஒரு நபருடன் பேசிய வாட்ஸ் அப் உரையாடல் நகல் ம.சா.ஆ.4 ஆகவும்,

5) குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.5 ஆகவும்,

6) குழந்தையின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.6 ஆகவும்

7) மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.7 ஆகவும்

8) 09.10.2024ம் தேதிய புகார் மனு கையிருப்பு நகல் ம.சா.ஆ.8 ஆகவும்,

9) 20.12.2024ம் தேதிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் நகல் ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(ம.சா.ஆ.4 ஆவணமானது எந்த மொபைல் போனில் இருந்து எடுக்கப்பட்டது, யாருடையது மற்றும் அதை நிரூபணம் செய்யக்கூடிய வகையிலான சாட்சியச் சட்டத்தின் அடிப்படையிலான சான்றிதழுடன் தாக்கல் செய்யவில்லை என்பதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும்.)**

**எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.07.21 15:35:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்